பயணச் சீட்டுகளை விற்கக்கூடிய வகையில் நியமிக்கக்கூடிய கண்டக்டர்களையும் பெண் கண்டக்டர்களாகவே நியமிக்கலாம் என்கின்ற யோசனையும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. ஆகவே, கூடுமானவரை ஏற்கெனவே கண்டக்டர் லைசன்ஸ் எடுத்து வேலைவாய்ப்பின்றி இருக்கக்கூடிய அத்தகைய பெண்களுக்கு இந்த வேலை வாய்ப்பு நிச்சயமாகப் பயன்படும்.

பல்லவன் போக்குவரத்து கழகம் அரக்குச் செலுத்த வேண்டிய கடன்.

***6139 திரு. பி. என். வல்லரசு :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் அரசுக்குச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் மற்றும் அதற்கான வட்டி, அபராத வட்டித் தொகை எவ்வளவு ?

(ஆ) இத்தொகையினை வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(ரூபாய் இலட்சத்தில்)

(அ) 31—3—1989-ல் நிலுவையில் உள்ள குறித்த காலக் கடன்கள்.	2,265.29
31—3—1989-ல் நிலுவையில் உள்ள வழிவகை முன்பணம்.	600.80
31—3—1989-ல் குறித்த கடன்கள் மீதான நிலுவையில் உள்ள வட்டி.	1,816.3
31—3—1989-ல் குறித்த கால கடன்கள் மீதான அபராத வட்டி.	15.51
31—3—1989-ல் வழிவகை முன்பணம் மீதான நிலுவையில் உள்ள வட்டி.	619.94
,, அபராத வட்டி	122.93

(ஆ) புதிய பேருந்துகளை பெருக்க விடவும், பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதியன ஓடவிடவும் அரசிடம் பெற்ற குறித்த காலக் கடன்கள் மற்றும் வழிவகை முன்பணத்தொகை அல்லது நிலுவையாக உள்ள வட்டியினையும் திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் உள்ளது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலதனத்தை சீர்செய்யவும் மிகையான ஊழியர்களை குறைக்கவும் வருமான இழப்பினை சீர்செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9-30 மணி

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுள்ள இத்தகைய நஷ்டத்திற்கு என்னென்ன காரணங்கள் என்று இன்றைய அரசு பரிசீலனை செய்துள்ளதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளவுக்கு அதிகமான ஊழியர்களை வேலைக்கு நியமித்தது ஒரு காரணம். நஷ்டம் என்பது பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் நீண்ட நாட்களாக இருந்து வருகிற ஒன்று. அதிலே மட்டும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் ஆட்சி மாற்றமோ கட்சி மாற்றமோ இல்லாத அளவுக்கு எப்போதுமே நஷ்டம் என்று சொல்கிற சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நஷ்டத்தைக் குறைக்க, அல்லது தவிர்ப்பதற்காகத்தான் நிதி மூலதனத்தைச் சீர் செய்தல், நிர்வாகப் பிரிவில் செலவைக் குறைத்தல் ஆகியவற்றை எல்லாம் நாம் கருத்தில் கொண்டு எப்படிச் சீர் செய்வது என்பது பற்றிய நட வடிக்கைகளை பல்லவன் போக்குவரத்துக் கழகம் மேற்கொண் டுள்ளது.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் எதிர்காலத்தில் இலாபம் கிடைப்பதற்கு இன்றைய அரசு என்னென்ன நடவடிக்கை களை எடுத்து உள்ளது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகள் கட்டணத்தின் மூலம் நமக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் குறைந்த அளவே உள்ளது. அந்த வகையில் ஒரு பெரிய நஷ்டத்தைத் தாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அத்தோடு உதிரி பாகங்கள், டீசல், டையர் ஆகிய வற்றின் விலையேற்றம்; நகர்ப்புறத்தில் ஓடுகின்ற காரணத்தால் தேய்மானச் செலவும் அதிகம்; அதனைப் பராமரிக்கக்கூடிய செலவும் அதிகமாகிறது; அதே நேரத்தில் தேவை இல்லாத அனாவசியச் செலவுகள்; மிக அதிகப்படியாக இருக்கக்கூடிய ஊழி யர்கள்: அவர்கள் செம்மையாக வேலைக்கு வராமல் திடீரென்று ஒரு நாளைக்கு 300 வண்டிகள், 400 வண்டிகள் ஓடாமல் நின்று விடுவது; இப்படிப்பட்ட பல்வேறு அலங்கோலங்கள் எல்லாம் பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் கடந்த ஆண்டு இருந்தது.

[1990 மே, 2]

இன்று அவைகளை எல்லாம் குறைக்க நடவடிக்கை எடுத்து, ஓடாத பேருந்துகள், முன் அறிவிப்பு இல்லாமல், வேலைக்கு வராமல் இருக்கக்கூடிய தொழிலாளர்கள், அனாவசியச் செலவுகள் போன்றவற்றை எல்லாம் குறைப்பதற்கு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த நடவடிக்கைகளின் பலன் தற்போது நமக்குக் கிடைப்பதற்கான வாய்ப்புகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் கடன்கள் நிறைய இருக்கின்றன; இந்தச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டியது இருக்கின்றது என்பதைப் பொறுத்த வரையில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சொன்னார்கள். ஆனால் அந்தக் கடன்களை அவர்களால் அடைக்க முடியுமா? அல்லது முடியாதா என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது. அதிலே இருக்கின்ற குறைகளைப் பார்த்தால் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என்று போய்க் கொண்டே இருக்கிறது. இத்தனை குறைகளையும் திருத்தி அதன்பிறகு சர்க்கார் கடனை அடைக்க முடியுமா? இல்லை என்றால் ரைட் ஆஃப் பண்ணக்கூடிய அளவில் இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அடைக்க முடியுமா என்று பார்ப்போம். இல்லாவிட்டால் ரைட் ஆஃப் செய்ய வேண்டியதுதான்.

ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக் கட்டிடங்கள் பராமரிப்பு.

***2253 திரு. எஸ். டேனியல்ராஜ் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக் கட்டிடங்களைப் பொதுப்பணித்துறை மூலமாக பராமரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி கட்டிடங்களைப் பொதுப் பணித்துறை மூலமாகப் பராமரிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.